பக்கங்கள் 18 + 05


மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 03 வியாழக்கிழமை 16.05.2024 அதிர்வு 290

## பஸ்ஸை செலுத்திய சாரதி மாரடைப்பால் உயிரிழப்பு!

(ஆ.ரமேஸ், பி.கேதீஸ்)



இ.போ.சவுக்குச் சொந்தமான பஸ்ஸின் சாரதி ஒருவர் தான் செலுத்திச் சென்ற பஸ்ஸில் மாரடைப்பு 04



# ஒஸ்லோ இணக்கப்பாட்டை சிதைத்து விட இடமளியாதீர்!

## பொது வேட்பாளர் யோசனை தொடர்பில் சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்குச் செய்தி

"உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பதுதான் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசும் சேர்ந்து இணங்கிக் கொண்ட கடைசி விடயம். அதற்கு பாதிப்பு - குந்தகம் ஏற்படுத்தும் விதத்திலான முடிவு எதையும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விஷப் பரீட்சை ஊடாக செய்வதற்குத் தமிழரசுக் கட்சியினர் இணங்கி விட - இறங்கி விடக் கூடாது."

- இவ்வாறு தமது தமிழரசுக் கட்சியினருக்கு ஆலோசனை - வழிகாட்டல் வழங்கியுள்ளார் அக்கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன். 04

# முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கான தடை உத்தரவு: இன்று நீக்கியது மூதூர் நீதிவான் நீதிமன்றம்!



## சட்டத்தரணி சுகாஸ் தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சியை வழங்குவதற்கு மூதூர் நீதிவான் நீதிமன்றம் முன்னர் வழங்கியிருந்த தடை உத்தரவை இன்று நீதிமன்றம் நீக்கியது என்று மேற்படி வழக்கில் எதிராளிகள் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.

சேனையூர் பிள்ளையார் கோயிலில் வைத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியமைக்காகக் கைது செய்யப்பட்டிருந்தவர்களின் வழக்கு இன்று விசேட நகர்த்தல் பத்திரம் மூலம் மூதூர் 04




# தோட்டத் தொழிலாளர்கள் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இரத்தினபுரியில் போராட்டம்

(எஸ். இரவீந்திரர்)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அப்பாவித் தோட்ட மக்களை அவ்வப் போது பல்வேறு காரணங்களுக்காகத் தோட்ட நிர்வாகம் உள்ளிட்ட வெளியார் தாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரத்தினபுரி நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் இன்று காலை 10 மணி முதல் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மலையக சிவில் உரிமைக்கான இயக்கம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கத்தினர், தோட்டத் தொழிலாளர்கள், தொழிற்சங்கவாதிகள் அரசியல்வாதிகள் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இரத்தினபுரி, தும்பரை 82 ஆவது தோட்டத்தில் அண்மையில் கடமைக்கு வர மறுத்த பெண் தோட்டத் தொழிலாளி ஒருவரைத் தோட்ட நிர்வாகத்தினர் கடுமையாகத் தாக்கினர். சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் தொழிலாளி, இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார்.

தோட்ட நிர்வாகத்தினரின் அராஜக



நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கோஷமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், இது போன்ற விடயங்களுக்குப் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மலையக மக்கள் இந்த நாட்டின் அடிமைகள் இல்லை எனவும் தெரிவித்தனர்.

ஒரு மணித்தியாலம் வரை முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பட்டத்தின் பின்னர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரத்தினபுரி மாவட்ட செயலாளர், சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் கையளித்தனர்.

சிவில் அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் பெருமாள், ஜனநாயக மக்கள் முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எம்.சந்திரகுமார் உள்ளிட்டோர் உரையாற்றினர்.





# யாழ். பல்கலை கல்விசாரா ஊழியர்கள் போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் திருநெல்வேலி சந்தி வரை பேரணியாகச் சென்று பல்கலைக்கழகத்தை மீண்டும் அடைந்தனர்.

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நடைபெற்று வரும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும் அரசும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.












# நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

(ரஸீன் ரஸ்மின்)

சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக ராஜாங் கனை மற்றும் அங்கமுவ ஆகிய நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் இன்று திறக்கப்பட்டுள்ளன என்று புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி தெரிவித்தார்.

இதன்படி இராஜாங்கனை நீர்த்தேக் கத்தின் நான்கு வான் கதவுகள் 2 அடி உயரத்திலும், அங்கமுவ நீர்த் தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் 3 அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள் ளன.

இதனால், இராஜாங்கனை நீர்த் தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரத்து 400 கன அடி நீரும், அங்கமுவ நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 1800 கன அடி நீரும் வெளி யேறுகின்றது என்று புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி மேலும் கூறினார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பஸ்ஸை...

ஏற்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் லிந்துலையில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பிரதான பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து மாலை 3.10 மணிய ளவில் புறப்பட்டு தலவாக்கலை ஊடாக பத்தனை சந்தி வழியாக நாவலப்பிட்டி நோக்கிப் பயணிக்கும் பஸ்ஸின் சாரதியே திடீர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இ.போ.சவுக்குச் சொந்தமான நாவ லப்பிட்டி டிப்போவில் பணியாற்றும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 41 வயதான ஆரத்தனகே என்ற சாரதியே உயிரிழந்துள்ளார் என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் லிந்துலை பொலிஸார் தெரி வித்தனர்.

மேற்படி சாரதி கெட்டபுலா, கடியலே ஹின்ன பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அவர் வழமையாக நுவரெலியா பிர தான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து நேற்று மாலை 3.10 மணியளவில் நாவ லப்பிட்டி நோக்கிப் பஸ்ஸை செலுத் தியுள்ளார்.

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுக்கலை சந்தியை பஸ் அண்மித்த வேளையில் தனக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது என்று கூறி பஸ்ஸை வீதியோரத்தில் அவர் நிறுத்தியுள்ளார்.

உடனே பஸ்ஸின் நடத்துனர் சாரதி அருகே ஓடிவந்து நிலைமையை ஆராய்ந்தபோது சாரதி மாரடைப்பால் அவதியுற்றுக் கொண்டிருந்தார்.

பின் மாற்று வாகனம் ஒன்றில் சாரதியை அருகில் உள்ள லிந்துலை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து சாரதியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டது.

---

### முள்ளிவாய்க்கால்...

நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள் ளப்பட்டது.

எதிராளிகள் சார்பில் முன்னிலை யாகிய எனது வாதத்தை அடுத்து மூதூர் நீதிவான் தஸ்னீம் பௌசான்

பானு தடை நீக்கல் தொடர்பான உத்த ரவை விடுத்தார் என்று சட்டத்தரணி சுகாஸ் கூறினார்.

கடந்த 12 ஆம் திகதி இரவு முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கி யமை மூலம் நீதிமன்றத் தடை உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் கீழ் ஒரு ஆணும், மூன்று பெண்களும் சம்பூர் பொலிஸ ரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் 13 ஆம் திகதி மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு இம்மாதம் 27 திகதி வரை விளக்கமறி யலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டவர்கள் ஐ.சி.சி.பி. ஆர். சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டமையால் இன்று அவர்களுக்கான பிணை வழங்கப்படவில்லை.

---

### ஒஸ்லோ...

இன்று தம்மை தமது கொழும்பு இல்லத்தில் சந்தித்த கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மூலமே இந்தச் செய் தியை – தமது நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இன்றைய சந்திப்பின்போது சம்பந்தன் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டத்தின் ஆபத்துக் குறித்து தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜா வுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசி விளக்கியுள்ளேன். இது குறித்து மேலும் விவரமாகப் பேசுவதற்காக அவரைக் கொழும்புக்கு வரும்படி அழைத் திருந்தேன். கொழும்புக்கு வர இயலாமல் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். அதனால் அவருடன் மீண்டும் தொலை பேசியில் விவரமாகப் பேசவுள்ளேன்.

இந்த வாரத்தில் சிறீதரன் எம்.பியும் என்னை வந்து சந்தித்தார். அவருக்கும் எல்லாவற்றையும் விளக்கியுள்ளேன். தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது It's a silly idea (முட்டாள்தனமான யோசனை), Crazy idea too (பைத்தியக்காரத் தனமான திட்டமும் கூட).

இது தமிழர்களின் எதிர்காலத்தை ஆபத்துக்குள் சிக்க வைக்கும் விஷப் பரீட்சை.

தமிழர்களின் உரிமைக்கான போராட் டம் மிக நீண்டது. பல கட்டங்களைத் தாண்டி வந்துள்ளோம். ஒஸ்லோ அறிவிப்பு அதில் உச்சமானது. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு – கிழக்குக்கு சமஷ்டி முறையிலான தீர்வுக்கு அந்த அறிவிப்பு மூலம் இலங்கை அரசு இணங்கி வந்துள்ளது.

அதற்குக் குறைந்த எதற்கும் இணங் கும் ஏற்பாடுகளுக்கு நாம் போக முடியாது. அந்த நிலைப்பாட்டை சிதறடிக்கும் வித மான ஒரு விஷப் பரீட்சைக்குப் பொது வேட்பாளர் என்ற அடிப்படையில் தமிழி னம் இணங்கவோ, இறங்கவோ கூடாது.

வடக்கு – கிழக்கு இணைப்புத் தொடர் பாக இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் ஓர் ஏற்பாடு உண்டு. இணைப்பை நிரந்தரமாக்க முன்னர் கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அனுமதி பெற வேண்டுமென்பதே அது. ஆனால், அது 19 வருடங்களாக நடைமுறைப்படுத் தப்படாமல் இணைப்பு நீடிக்கப்பட்டது.

கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னரே அந்தத் தேர்தலை நடத்த வேண்டும், நடத்த முடியும் என்ற ஏற்பாடும் அதில் உள்ளது. 'இப்படி அந்த ஏற்பாடு இருக்கின்ற காரணத்தினால் இனி எப் போதும் அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடியாது – வடக்கு, கிழக்கு இணைப்பை வருடாந்தம் நீடிப்ப தைத் தவிர' – என்று தமக்குள் ஜே. ஆர்.ஜெயவர்த்தன நொந்து கொண்டார்.

அந்த நேரத்தில் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவே இடம்பெயர்ந்த மக்கள் மீளக்கூடியமர்த்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. இப்போது வடக்கு – கிழக்கில் இருந்து நாட்டுக்குள்ளும் வெளிநாடுகளுக்கும் பல இலட்சம் தமிழர்கள் இடம்பெயர்ந் துள்ள நிலையில் பொது வாக்கெடுப்பு போன்ற ஒன்றை – விஷப் பரீட்சையை நாமே கோரி அதில் இறங்குவது என்பது நம்மை நாமே அழிப்பதற்கு ஒப்பானதா கும். ஆகவே, அத்தகைய திட்டத்துக்குத் தமிழரசுக் கட்சி இடம் கொடுக்கக் கூடாது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் என்ன முடிவு எடுக்க வேண்டும் என்பது தொடர்பில் அவசரப்படத் தேவையில்லை. முதலில் பிரதான தென்னிலங்கைக் கட்சிகளின் வேட்பாளர்களின் தெளிவான நிலைப்பாடு அவர்களின் தேர்தல் விஞ் ஞாபன அடிப்படையில் வெளியான பின் னர், அவற்றைப் பரிசீலித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடிய பின்னர் நாம் ஒரு தீர்க்கமான தீர்மானத்தை எடுக்கலாம். அதற்கு முன்னர் அவசரப்பட தேவையில்லை. இதை என்னுடைய செய்தியாகத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் கூறுங்கள். இந்த விட யத்தை ஏற்கனவே மாவை சேனாதி ராஜாவுக்கும் சிறீதரனுக்கும் நான் விளக் கியுள்ளேன். மாவையுடன் திரும்பவும் பேசுவேன்." – என்று சம்பந்தர் குறிப்பிட் டிருக்கின்றார்.



# பாவனைக்கு உதவாத நிலையிலிருந்த 170 கிலோ பெரிய வெங்காயம் அழிப்பு

மூதூர் பிரதேச சபைக்கு உட்பட்ட தோப்பூர் வாராந்த சந்தையில் மக்கள் பாவனைக்கு உதவாத 170 கிலோ பெரிய வெங்காயம் பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) அழிக்கப்பட்டது.

வாராந்த சந்தைத் தொகுதிக்குச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப் பின் போதே இந்த வெங்காயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# விஷப் பரீட்சை

வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி முட்டாள்தனமானது (Silly), பைத்தியக்காரத்தனமானது (Crazy) என்று தமது சொல்லாடல் மூலம் கண்டித்திருக்கின்றார் தமிழர்தரப்பின் மூத்த அரசியல் தலைவரான இரா.சம்பந்தன்.

ஆழ்ந்து, கூர்ந்து கவனிக்க வேண்டிய விடயங்கள் அதற்குள் பொதிந்து இருக்கின்றன என்றே தோன்றுகின்றது.

சம்பந்தன் கூறுகின்றமை போல ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டம் நீண்டது. பல நுணுக்கமான - பூடகமான - அம்சங்களும், விடயங்களும், நிகழ்வுகளும் அதற்குள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றை நோக்காமல் - கவனத்தில் எடுக்காமல் - இப்போதைய நிலைமைக்கு ஏற்றபடி நாங்கள் திடுதிப்பென தீர்மானம் எடுக்கக் கூடாது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு, கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அது நடத்தப்படாமலேயே 19 வருடங்களுக்கு மேல் அது இணைக்கப்பட்டிருந்தது. அது - அந்த சர்வஜன வாக்கெடுப்பு - ஏன் அந்தக் காலகட்டத்தில் நடத்தப்படவில்லை என்று கேள்வி எழுப்பும் சம்பந்தன், அதற்கான பதிலையும் தருகின்றார்.

கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அங்கு மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னரே அங்கு இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதே இணக்கம் காணப்பட்ட ஏற்பாடு என்று அவர் சுட்டுகின்றார். அதற்கு முன்னர் இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அது தமிழர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற காரணத்தினால்தான் அந்த நிபந்தனை போடப்பட்டது. 'அந்த நிபந்தனை இருக்கின்றமையினால் இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பை கிழக்கில் என்றுமே நடத்த முடியாது - இணைப்பை வருடா வருடம் நீடிப்பதை தவிர' என்று அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன நொந்து கொண்டார் என்று சம்பந்தன் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

கிழக்கில் இடம்பெயர்ந்த தமிழர்கள் மீளக்குடியமர்த்தப்படாமல் இணைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடாது, அது தமிழருக்குப் பாதிப்பு என்பது 1987 இலேயே இந்தியத் தரப்பு மட்டத்தில் இணக்கம் காணப்பட்டிருக்கையில், இப்போது தமிழர் தேசமெங் கும் அங்கிருந்து பிற பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும் மில்லியனுக்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்திருக்கையில் ஒரு பொது வாக்கெடுப்பு என்ற விஷப் பரீட்சைக்குள் நமது இனத்தை நாமே தேடி இழுத்து விடுவது நமக்கு நாமே சூனியம் வைக்கும் வேலையன்றி வேறு யாது?

சம்பந்தன் சுட்டுவது போல நமது நீண்ட போராட்டத்தின் உச்சம் தொட்டது ஒஸ்லோ கொள்கை அறிவிப்பாகும்.

அதன்படி தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை இலங்கை அரசு ஏற்றுள்ளது. அதன் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்கு கிழக்குக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வைத் தருவதற்கு இலங்கை அரசாங்கம் - அதுவும் இன்று ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க அன்று பிரதமராக வழிகாட்டிய அரசாங்கம் - சர்வதேச மட்டத்தில் இணங்கிய ஏற்பாடு அது.

அதுதான் தமிழர்களின் நிலைப்பாடு தொடர்பாகக் கடைசியாக காணப்பட்ட இணக்கம். கொழும்பு சர்வதேச மட்டத்தில் ஒப்புக்கொண்ட தரநிலை.

அதற்குக் கூடிய ஒன்றுக்கோ அல்லது குறைந்து ஒன்றுக்கோ மக்கள் அங்கீகாரம் கேட்டு செல்கின்றோம் என்ற விஷப் பரீட்சைக்குள் தமிழினத்தை வீழ்த்த எத்தனிப்பது என்பது - அதுவும் கோட்பாட்டு ரீதியிலும், செயற்பாட்டு ரீதியிலும் தமிழர் ஐக்கியம் சிதைந்துள்ள இந்தச்சந்தர்ப்பத்தில் அதற்குள் வீழ்த்த முனைவது - சம்பந்தன் கூறும் முட்டாள்தனம், பைத்தியக்காரத் தனம் என்பவற்றைத் தாண்ட கோடரிக் காம்புத்தனமும் கூட என்பதையும் மறுப்பதற்கில்லை.

1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்த மூலம் மாகாண ஆட்சி முறையை தமிழர் தேசம் மீது வலிந்து திணிக்கும் முடிவை மேற்கொண்ட இந்தியாவுக்கு, அதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர், 1977 பொது தேர்தலை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக மாற்றி தமிழர் தேசம் அங்கீகரித்திருந்த தனித்தமிழீழம் என்ற நிலைப்பாடு அப்போது தலையிடி கொடுப்பதாக இருந்தது.

இன்றும், அதுவும், 2002 ஆம் ஆண்டின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி தீர்வு என்ற சர்வதேச மட்டத்திலான ஒஸ்லோ கொள்கை அறிவிப்பும், அதே மாகாணசபைத்தீர்வுக்கானவற்புறுத்தலுக்கு இடைஞ்சலாக இருக்கின்றன. ஆதலால் அவற்றுக்கு - அந்த நிலைப்பாடுகளுக்கு - நிரந்தரமாக ஆப்பு வைக்கும் விஷப் பரீட்சையில் தமிழர் தேசத்தை தள்ளிவிடும் இந்த முயற்சி குறித்து தமிழர்கள் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும்.



# வடமேல் மாகாணத்தில் பணியாற்றும் ஆசிரியர் பிரச்சினைக்குத் துரித தீர்வு!

## மாகாண ஆளுநர் தெரிவிப்பு

(ரஸீன் ரஸ்மின், எம்.எம்.ஜெஸ்மின்)

வடமேல் மாகாணத்தில் தற்போது பணியாற்றி வரும் அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்க்க ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மாகாண ஆளுநர் ஹாபிஸ் நஸீர் அஹமட் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விஷேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (14) ஆளுனரின் அலுவலகத்தில் இடம்பெற்ற போதே இதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வடமேல் மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், வடமேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், வடமேல் மாகாணத்தின் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வடமேல் மாகாணத்தில் நிலவும் அதிபர் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண்பது குறித்தும், ஆசிரியர் பற்றாக்குறை போன்ற விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மாகாண மட்டத்தில் அதிபர் இடமாற்றம் குறித்த பிரச்சினை நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருப்பதை அவதானித்த ஆளுநர், அதிபர் இடமாற்றங்கள் குறித்து துரித நடவடிக்கை எடுக்குமாறு ஆளுனரின் செயலாளர் மற்றும் மாகாண பிரதம செயலாளர் ஆகியோருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்போது ஒரே பாடசாலையில் ஐந்து வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ச்சியாகக் கடமையாற்றுவோர், கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் பணியாற்றுவோர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்குமாறும் ஆளுனர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஏனைய மாகாணங்களில் இருந்து வடமேல் மாகாணத்தில் கடமைபுரிவோரை துரிதமாக சொந்த மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

எதிர்கால சந்ததியை வலுப்படுத்தும் வகையில் மாகாண மட்டத்திலான கல்வி நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, குறைபாடுகளைக் களைந்து, கல்வி அபிவிருத்திக்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் தனது ஆதரவை வழங்குவதாகவும் ஆளுநர் ஹாபிஸ் நஸீர் அஹமட் இங்கு குறிப்பிட்டார்.

அதிபர் இடமாற்றங்கள் தொடர்பான விவரங்களை இணையத்தளம் ஊடாக விரைவில் வெளியிட ஏற்பாடு செய்வதாக ஆளுனரின் செயலாளர் இதன்போது உறுதியளித்தார்.





# திடீர் மரண விசாரணை அதிகாரி மன்னார் பிரதேசத்துக்கு நியமனம்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரியாக திருமதி ஜூடிற் ஷியாமினி தயாளராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

2024.05.13 ஆம் திகதி திங்கள் கிழமை கொழும்பில் நீதி அமைச்சர் விஜயதாஷ ராஜபக்ஷவால் இவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

நீண்ட காலமாக மன்னார் பகுதிக்குள் திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லாத குறை இதன் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் பெரியகமத்தைச் சேர்ந்தவரும கடந்த ஆறு வருடங்களாக நீதி அமைச்சின் கீழ் இயங்கி வரும் மத்தியஸ்த சபை மத்தியஸ்தராகவும் இவர் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.







# திருமலையில் மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தால் மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்வு திருகோணமலை நகரசபை பொது நூலக மண்டபத்தில் நேற்றுக் (15) காலை விசேட தேவையுடையோருக்கான சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். கௌரிசாந் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை நகர சபையின் செயலாளர் வெ. இராஜசேகர், மாவட்ட சமூக சேவை இணைப்பாளர் த. பிரணவன், பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ. புரபானந்தன், நகரசபை பொது நூலகத்தின் பிரதம நூலகர் ந . யோகேஸ்வரன், நூலகர் றிம்சானா, நூலக உதவியாளர்களான அ . அச் சுதன், உ.ரஜனிக்காந் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.



# ஆலையடிவேம்பு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய சமுர்த்தி சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தொழில் வழிகாட்டல் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு பிரதேச செயலகங்கள் ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச செயலக மண்டபத்தில் இளைஞர் யுவதிகளுக்கான செயலமர்வு நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் மற்றும் உதவி பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் என்.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற விழிப்பூட்டல் கருத்தரங்கில் கருத்திட்ட முகாமையாளர் கமலபிரபா, முகாமைத்து பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன், கருத்திட்ட உதவியாளர் ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.


வளவாளர்களாக அம்பாறை மாவட்ட மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.அருளானந்தம், திருக்கோவில் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.கங்காதரன், நைட்டா நிறுவனத்தின் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் பி.எம்.வாஜித், ஆலையடிவேம்பு மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் றியாஸ்லின், சிறு கைத்தொழில் அபிவிருத்தி உத்தி யோகத்தர் நிம்சாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து தொழிலுக்காகக் காத்திருக்கின்றவர்கள் மற்றும் தொழில் வழிகாட்டல் பயிற்சியை நிறைவு செய்து என்.வி.கியூ சான்றிதழ் பெறவுள்ளவர்கள் என பலர் இதில் கலந்துகொண்டனர்.

# பஸ்ஸைச் செலுத்திச் சென்றபோது மாரடைப்பால் உயிரிழந்தார் சாரதி!









(ஆ.ரமேஸ்)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் சாரதி ஒருவர் தான் செலுத்திய சென்ற பஸ்சில் மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். இதனால் பஸ் பாரிய விபத்தில் இருந்து மயிரிழையில் தப்பியுள்ளது.

சம்பவம் லிந்துலை பொலிஸ் நிலைய பிரிவில் நேற்று (15) மாலை பதிவாகியுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பிரதான பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து நேற்று மாலை புறப்பட்டு தலவாக்கலை ஊடாக பத்தனை சந்தி வழியாக நாவலப்பிட்டி நோக்கி பயணித்த பஸ் சாரதியே இவ்வாறு திடீர் மாரடைப்புக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த சாரதி இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான நாவலப்பிட்டி டிப்போவில் பணியாற்றும் இரண்டு பிள்ளைகளில் தந்தையான ஆரத்தனகே (வயது 41) என்பவர் என விசாரணைகளை மேற்கொண்டு வரும் லிந்துலை பொலிசார் தெரிவித்தனர். சாரதியின் உடல் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று லிந்துலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





# தேசிய அடைவு மட்டத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் நேற்றுக் கௌரவிப்பு

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய அடைவு மட்டத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களான கிண்ணியா சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம். றசீன், வெருகல் கிராம உத்தியோகத்தர் கு. சாள்ஸ் அன்ரனி மற்றும் தங்களுக்கு வழங்கப்பட்ட பிரதேச செயலக இலக்கை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு சிறப்பாக பணியாற்றிய மொறவெவ உதவி பிரதேச செயலாளர் கே. சத்தியப்பிரியா, மொறவெவ அபிவிருத்தி உத்தியோகத்தர் கோபிஷா ஆகியோர் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மேலதிக அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் மற்றும் மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.சுதாகரன் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அரச அதிபரின் மெச்சுரை வழங்கப்பட்டது.

மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த திருகோணமலை வென்றாசன்புற வித்தியாலய மாணவி ஜே.எம். தருஷி உபேக்சா அமரஸ்ரீக்கு மேலதிக பிரதிலாபக் கொடுப்பனவாக காசோலையும் வழங்கப்பட்டது.

இதன்போது இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரி பா.சஜிக்கா மற்றும் மாணவியின் பெற்றோரும் கலந்து கொண்டனர்.








# மிகப் பெரிய மனித உரிமை மீறலுக்கான நாளாக தமிழின ஒழிப்பு நாளை அடையாளப்படுத்துக!

## சர்வதேசம் தலையிட்டு நீதி வழங்க வேண்டும் என்கிறார் ஜெயசிறில்

( வி.ரி.சகாதேவராஜா)

உலகின் மிகப்பெரிய மனித உரிமை மீறலுக்கான நாளாக முள்ளிவாய்க்கால் தமிழின ஒழிப்பு நாளை அடையாளப் படுத்தமுடியும். இதனை ஊழி உள்ள காலம் வரை எந்தத் தமிழனும் மறக்க முடியாது. மறக்கவும் மாட்டான்.

இவ்வாறு காரைதீவில் நேற்று (15) புதன்கிழமை நடைபெற்ற முள்ளிவ ாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

கொத்து கொத்தாக கொல்லப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கு நீதி வேண் டும். சர்வதேசம் இன்னும் தாமதிக்காமல் தலையிட்டு நீதி வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச அமைப்பாளரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் மற்றும் பொதுமக் கள் இணைந்து, முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வார நிகழ்வை நேற்று (15) புதன்கிழமை காரைதீவு பிரதான சந்தைக்கு முன்பாக அனுஷ்டித்தனர்.

நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை யின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சசிகு மார், சக்தி மீன்பிடி சங்கத் தலைவர் கோபால், சமூக செயற்பாட்டாளர்களான கணபதிப்பிள்ளை ஹறிசன், வினாயகம் விமலநாதன், பிரமுகர் தம்பிராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வீதியில் சென்றவர்க ளுக்கு கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது.

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்,

தமிழர்களின் மனதில் நீங்காத நினைவு நாள் முள்ளிவாய்க்கால் மே 18. தமிழினம் அழிக்கப் பட்ட நாள். கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட எம் மாணவர்களையும் அப்பாவி தமி ழர்களையும் கொன்று குவித்த மே 18 நாளை உலகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் ஒருபோதும் மறந்துவிட முடியாது.

இந்த நினைவு நாளை மழுங்கடிக்கச் செய்து மறந்து போக வேண்டும் என்பதற்காக இங்கு யுத்த வெற்றிகள் அரசால் கொண்டாடப்படுகின்றன. அது எமது உறவுகளை இழந்த மக்கள் உணர்வு பூர்வமாக இறுதி மரணத்தின் போது இறுதியாக அருந்திய முள்ளி வாய்க்கால் கஞ்சி நிகழ்வேந்தலானது பல பிரதேசங்களில் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். மாணவர்கள் அப்பாவி தமிழ் மக்கள் மீது கேட்பார் பார்ப்பார் யாரும் இல்லாமல் கடந்த 2009 ஆம் ஆண்டு கொன்று குவித்தது போல் எதிர்வரும் காலங்களில் நடந்து விடக்கூடாது என்பதற்காக இதனை நடாத்துகிறோம்.

எதிர்வரும் காலங்களிலும் எமது எதிர்கால சிறார்கள் இதை புரிய வைக்க வேண்டிய ஒரு தார்மீக பொறுப்பு எமக்கு இருக்கின்றது .எமது மக்களுடைய பயங்கரமான மிலேச்சத்தனமான படுகொலையை செய்த இந்த ஆட்சி யாளர்கள் முள்ளிவாய்க்காலில் கொத் துக் கொத்தாக துண்டுத் துண்டாக சிதைக்கப்பட்டு உயிர் பிரியும் போது அவர்களுடைய திட்டுக்கள் இன்று பலித்திருக்கின்றன.

எம் தலைவர்கள் சொன்னது போன்று அவர்களை தெரிவு செய்த மக்களே அவர்களை இந்த நாட்டை விட்டு இந்த ஆட்சியை விட்டு விரட்டிய காலம் நடைபெற்றது .

இந்த ஆத்மாக்கள் எவ்விதமான குற்றமும் செய்யாமல் தமிழர்களாய் பிறந்த காரணத்தினால் தத்தளிக்க தத்தளிக்க உயிர் பிரியும் போது அவர்க ளுடைய சிந்தனை அவர்களுடைய ஆத்மாக்களினுடைய விருப்பங்கள் இன்று அரங்கேறி இருக்கின்றன.

தமிழினத்தின் படுகொலை தொடர் பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். எமது மக்களுக்கான நீதி கிடைக்கப்பெற வேண்டும். எதிர்காலத் தில் எமது தமிழர்கள் மீது இவ்வாறான செயல்பாடுகள் இடம் பெறக் கூடாது என்பதற்காக உலகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் அனைவரும் முள்ளிவாய்க் கால் நினைவு நாளை உணர்வு பூர் வமாக அனுஷ்டித்து வருகின்றார் கள்.

இந்த உறவுகளை இழந்த எங்க ளுடைய வலிகளை அடக்கியாண்டு இந்த தினத்தை நினைவு கூற - உறவு களை நினைவு கூற முடியாது என்று சொல்வதற்கு இங்கு யாருக்கு உரிமை கிடையாது.

உயர்நீத்த உறவுகளை ஒவ்வொரு தமிழனும் உணர்வு பூர்வமாக நினைவு கூற முடியும். எமது தமிழர்கள் தத்தளித் துப் பல்லாயிரக் கணக்கான மக்கள் அழிவின் பாதையிலும் அடக்குமுறை களிலுமே ஒடுக்கப்பட்டார்கள். பயங்கர வாத சட்டத்தின் ஊடாக பல அப்பாவித் தமிழர்களைச் சிறைவாசம் வைத்தார் கள்.

தமிழர்களுடைய நில வளங்கள் நீர் வளங்கள் நாளுக்கு நாள் சுரண் டப்பட்டு கொண்டு வருகின்றது. எங்களு டைய வணக்க ஸ்தலங்களுக்குப் பதி லாக புத்தர்கள் எழுந்த வண்ணம் ஈருக் கிறார்கள். எமது இனத்தின் நிலத்தையும் எமது இனத்தையும் கபளீகரம் செய்த வர்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக நாங்கள் போராடி எமது இனத்தின் விடுதலைக்காகவும் எனது இனத்தின் இழப்புக்களுக்கான நீதிகளை பெறும்வரையும் எங்களுடைய நினைவு கூரல்களும் போராட்டங்களும் தொடரும்.- என்றார்.





# கணமூலை - கந்ததொடுவா வீதியை ‘காப்பெட்’ வீதியாக மாற்றத் திட்டம்!

**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கணமூலை – கந்ததொடுவா வீதியைக் காப்பெட் வீதியாகப் புனரமைப்பதற்கான வேலைகள் நேற்று (15) உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான அமைப்பாளர் ஏ.எச்.எம்.ரியாஸின் வேண்டுகோளுக்கு இணங்க, மறைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா மற்றும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிந்தக அமல் மாயாதுன்ன ஆகியோரின் சிபார்சில் இந்த வீதியின் புனரமைப்பு பணிகள் நடைபெற வுள்ளன.

இந்த வீதியின் புனரமைப்பு பணிக் காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 5.5 கிலோ மீற்றர் வரையான குறித்த வீதி, ‘காப்பெட்’ வீதியாகப் புனரைக்கப்படவுள்ளது.

இந்த வீதி புனரமைப்பு வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான சிந்தக அமல் மாயாதுன்ன பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன், வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட முஸ லிம் பிரதேசங்களுக்கான அமைப்பாள ருமான ஏ.எச்.எம்.ரியாஸ், கற்பிட்டி பிரதேச சபை முன்னாள் தலைவர் எம்.எஸ்.சேகு அலாவுதீன், மறைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவின் மனைவி சமரி பிரியங்கா பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியின் அக்கரைப்பற்று அமைப்பாளர் ஏ.ஜே.எ ஸ்.மரிக்கார், தொழிலதிபர் அஸ்ரின் அலாவுதீன் , தாருஸ்ஸலாம் ஜனாஸ ா அமைப்பின் தலைவர் எம்.எஸ்.முஸ ம்மில் உட்பட மஸ்ஜித் நிர்வாகிகள், உலமாக்கள், சமூக அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# கண் சத்திர சிகிச்சை வைத்தியசாலையை காத்தான்குடியில் நிறுவுவதற்கு நடவடிக்கை

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

சவுதி அரேபிய நாட்டின் அல்–பஸ ர் பவுண்டேஷனின் முழு ஒத்துழைப்புடன் ஜெம்மியத்துஸ் ஸபாப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கண் சத்திர சிகிச்சை முகாம் காத்தாங்குடி தள வைத்தியசாலையில் இடம்பெற்றது.

நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த சுமார் ஆயிரம் கண் நோயாளர்களுக்கு இலவசமாக சத்திர சிகிச்சை வழங்கப் படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் முன்னாள் ஆளுநருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா பங்கேற்றார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பங்கேற்று உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லா, மிக விரைவில் காத்தான்குடியில் அதிநவீன தொழில் நுட்பங்களைக் கொண்டு தள வைத்திய சாலையுடன் இணைந்ததாக கண் சிகிச்சை வைத்தியசாலை ஒன்றை சவுதி அல்–பஸர் மற்றும் ஜெம்மியத்துஸ் ஸபாப் நிறுவனங்களின் முழு ஒத்து ழைப்புடன் நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

அத்துடன் சத்திர சிகிச்சை இடம் பெறும் பிரிவுக்கு, முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லா நேரில் சென்று பார்வை யிட்டார்.

# 7 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் கற்பிட்டியில் இளைஞர் ஒருவர் கைது

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – கற்பிட்டியில் வீடொன்றில் இருந்து 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 7ஆயிரம் போதை மாத்திரைகளுடன் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் மருந்தகமொன்றில் கடமை புரிந்து வந்த 32 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த வீட்டை



சோதனை செய்தபோது, கைது செய்யப்பட்ட சந்தேகநபர் உறங்கும் அறையில் மீன்பிடி வலைகளுக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில் போதை மாத்திரைகள் அடங்கிய பெட்டிகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது 58 பெட்டிகளில் அடைக்கப்பட்ட 7 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த போதை மாத்திரைகள் கொழும்பில் இருந்து கற்பிட்டிக்குக் கொண்டுவரப்பட்டன என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# சம்மாந்துறையில் சுகாதார அதிகாரிகள் 13 நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு!

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டாலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள வர்த்தக நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம். கபீர் தலைமையில் காரைதீவு, நிந்தவூர், இறக்காமம் ஆகிய பிரதேசங்களின் சுகாதார வைத்திய அதிகாரிகளும், அந்த சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களின் மேற்பர்வை பொதுச் சுகாதார அதிகாரிகளும், பொதுச் சுகாதார அதிகாரிகளும் இணைந்து நடத்திய உணவு நிலைய பரிசோதனைகளில் 67 நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன் போது மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களை தம்




வசம் வைத்திருந்த 13 நிறுவனங்களில் இருந்து பெருமளவான உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டன. இதன் போது தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட 13 நிறுவனங்களிடம் ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது.

# கல்லடி வேலாயுதர் சுவாமி ஆலய வருடாந்த திருவிழா!

(பழுவூரான்)

கல்லடி ஸ்ரீ வலாயுதர் சுவாமி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று வியாழக்கிழமை (16) வாஸ்து சாந்திக் கிரியைகளுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 07 தினங்கள் விஷேட பூசை நிகழ்த்தப்பட்டு, சுவாமி உள்வீதி மற்றும் வெளிவீதி வலம் வருவார்.

இந்த நிலையில் 7 ஆம் நாள் திருவிழா 22 ஆம் திகதி கோயில் தெருவாழ் மக்களால் நடத்தப்பட உள்ளது .

எதிர்வரும் வியாழக்கிழமை (23) அதிகாலை தீ மிதிப்பு வைபவம் இடம் பெறுவதோடு, சமுத்திர நீராடல், திருப்பொன்னூஞ்சல், அன்னதானம் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

ஆலய உற்சவக் கிரியைகள் யாவும் ஆலய பிரதமகுரு பால சதீஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ளன.





# மூவின மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்த புரிந்துணர்வு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட ஸ்ரீ லங்கா யுனைட்ஸ் செயற்பாட்டு நிலையங்களைச் சேர்ந்த மூவின மாணவர்கள் இன, மத மொழி மற்றும் கலாசார வேறுபாடுகளுக்கு அப்பால் இணைந்து புத்துணர்வு நிகழ்வொன்றைத் திருகோணமலை மாவட்டத்தில் நடாத்தினர்.

உகன, கல்முனை, நாவிதன்வெளி, கல்லடி மற்றும் வாழைச்சேனை போன்ற பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றிணைந்து இன நல்லுறவை கட்டியெழுப்பும் வகையிலும், பரஸ்பர ஒற்றுமையை வலுவூட்டும் வகையிலும் கல்விச் சுற்றுலா ஒன்றின் மூலம் சேருவில ரஜமஹா விகாரை, கிண்ணியா வெந்நீர் ஊற்று, திருக்கோணேஸ்வரம் கோவில் மற்றும் உள்ளூர் பொழுதுபோக்கு இடங்களுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

தமிழ்,சிங்கள, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மாணவர்கள் இணைந்த குழு செயற்பாடுகளை உருவாக்குதல், குழந்தைகள் தலைமையிலான திட்டங்களை செயல்படுத்துதல் தலைமைத்துவம் மற்றும் தகவல் அமர்வு மூலம் இன ஒற்றுமை , சமாதானம், நல்லிணக்கம் பற்றிய அமர்வுகள் இடம்பெற்றன.




# கல்முனை சுகாதாரப் பணிப்பாளர் உல்லை வைத்தியசாலைக்கு விஜயம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோர் பொத்துவில் உல்லை வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது வைத்தியசாலைகளின் நிலைமைகளைப் பார்வையிட்ட பணிப்பாளர் அங்கு நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்தும் பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் கேட்டறிந்தார்.

இதன்போது வைத்தியசாலைக்கு மிக அவசியத் தேவையாக காணப்பட்ட தளபாடங்கள் சிலவற்றைக் கையளித்த பணிப்பாளர், அந்த வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ள புனர்நிர்மாண பணிகளைத் துரிதப்படுத்துமாறும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளைப்பணித்துள்ளார்.




ஆஸ்திரேலியாவின் பத்திரிகை சுதந்திரத்துக்குக் கரிநாள் !

# ஆப்கான் போர்க்குற்றங்களை வெளியிட்டமைக்குச் சிறை!!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலக பத்திரிகை சுதந்திரத்தில் ஆஸ்திரேலியா தற்போது 39 ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. ஆப்கானில் ஆஸ்திரேலியாவின் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்தியவருக்கு சிறைத்தண்டனை விதித்தன் மூலம் ஆஸ்திரேலிய ஜனநாயகத்தின் கரிநாள் என கருதப்படுகிறது.

**ஆப்கான் போர்க்குற்றங்கள்**

இராணுவ வழக்கறிஞரான டேவிட் மக்பிரைட்டி ஆப்கானிஸ்தானில் இரண்டு சுற்றுப் பயணங்களைச் செய்தார். ஆப்கானிஸ்தான் குடிமக்கள் கொல்லப்பட்டனர் என்பதை அவரே முதன்முதலில் வெளிப்படுத்தினார்.

ஆயினும் அவர் இராணுவ இரகசியங்களை திருடி வெளியிட்டார் எனவும் குற்றஞ் சாட்டப்பட்டார். இத்தகவலை அம்பலப்படுத்தியதை மக்பிரைட் கடந்த வருடம் ஏற்றுக் கொண்டிருந்தார்.

தற்போது ஆப்கானிஸ்தானில் ஆஸ்திரேலியாவின் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்திய சட்டத்தரணி டேவிட் மக்பிரைட்டுக்கு ஆஸ்திரேலிய நீதிமன்றம் ஐந்து வருடங்கள் 8 மாதம் சிறைத் தண்டனை விதித்துள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விசாரணைகளின் போது ஆஸ்திரேலிய படையினர் ஆப்கானிஸ்தானில் 38 பொது மக்களை கொலை செய்தமை தெரியவந்தது.

இவர் எவ்வித துன்புறுத்தலை எதிர்கொண்டவர் அல்ல என்றாலும், தற்காலத்தில் சிறையில் அடைக் கப்பட்ட முதல் ஆஸ்திரேலிய விசில் ப்ளோவர் (Wistle Blower) ஆவார். ஆயினும் ஜனநாயக நாட்டில் உண்மையை தெரிவிப்பது தனது தார்மீக கடமை எனத் தான் கருதியதாக டேவிட் மக்பிரைட் தெரிவித்துள்ளார்.

**கிழக்கு திமோர் சாட்சியம்**

இதற்கு முன்பாக கிழக்கு திமோரில் ஆஸ்திரேலி யாவின் ஒழுக்கக் கேடான உளவுத்துறை செயலை அம்பலப்படுத்த உதவிய பேர்னாட் குலாரேக்கு (Bernard Collaery) 2021 இல் இடைநீக்கம் செய்யப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டது. பிற்காலத்தில் அட்டர்னி ஜெனரல் மார்க் ட்ரேஃபஸ் தலையிட்டபோதுதான் காலேரியின் வழக்கு இறுதியில் முடிந்தது.

2009 முதல் 2013 முதல் ஆப்கானில் சிறைக் கைதிகள், விவசாயிகள், பொது மக்களைக் கொலை செய்தமைக்காக 19 முன்னாள் மற்றும் தற்போதைய படைவீரர்களை விசாரணை செய்யவேண்டும் என விசாரணை அறிக்கையை ஆஸி நீதிமன்றம் பரிந்துரை செய்தது.

தொடர்ச்சி▼






# ஆப்கான் போர்க்குற்றங்களை வெளியிட்டமைக்குச் சிறை!!

**தொடர்ச்சி▲**

ஆஸ்திரேலியாவின் விசேட வான்சேவை படையணியைச் சேர்ந்தவர்களே இந்தப் போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிய வந்தது.

ஆயினும் யுத்தக் குற்றங்கள் குறித்த தகவல்களை அம்பலப்படுத்தியமைக்காக ஆஸ்திரேலிய அரசு இவரையே தண்டித்துள்ளது. ஆயினும் உண்மையான குற்றவாளிகளை தண்டிக்க முயலவில்லை என அவரின் ஆதரவாளர்கள் தொடர்ச்சியாக குற்றம்சாட்டி வந்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் ஆப்கான் யுத்த குற்றங்கள் தொடர்பில் முதலில் சிறைத்தண்டணை விதிக்கப்பட்டவர் என இவர் கருதப்பட்டாலும், இவருக்கான ஆதரவு பெருகி வருகிறது. இவர் யுத்தகுற்றவாளியல்ல, மாறாக அதனை அம்பலப்படுத்தியவர் என்பது ஒரு கேலிக் கூத்தான விடயம் என சர்வதேச நீதிக்கான ஆஸ்திரேலிய நிலையத்தின் நிறைவேற்று இயக்குநர் ரவான் அராவ் கண்டித்துள்ளார்.

மக்பிரைட்டின் சிறைத்தண்டனை ஆனது, உண்மையை அம்பலப்படுத்தும் ஆர்வம் கொண்டுள்ளவர்களிற்கு கடும் அச்சத்தை ஏற்படுத்தும் என்றும், அவுஸ்திரேலிய ஜனநாயகத்தின் கரிநாள் என மெல்பேர்னை சேர்ந்த மனித உரிமைகள் சட்ட நிலையத்தின் பதில் சட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கைச் சுற்றியுள்ள அனைத்து சிக்கல்களுக்கும், அதன் மையத்தில் சில எளிய உண்மைகள் உள்ளன. டேவிட் மெக்பிரைட், ஆப்கானிஸ்தானில் ஆஸ்திரேலியாவின் போர்க் குற்றங்கள் பற்றிய உண்மை விசாரணை அறிக்கைக்கு வழிவகுத்த ஆவணங்களை தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பாளரிடம் (ABC) கசியவிட்டார். இது சந்தேகத்திற்கு இடமின்றி பொது நலன் சார்ந்தது ஆகும் என அவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவின் பத்திரிகை சுதந்திரச் சட்டங்களின் அடிப்படையில், மெக்பிரைடு தனது செயல்களில் பொது நலன்களை நிரூபிக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் அதற்கு பதிலாக அவர் சிறைக்கு செல்கிறார் என ஊடக அறிஞர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

**போரின் வெட்கக்கேடான பதிவுகள்**

ஆப்கான் போர்க் குற்றச் சாட்டுக்களையடுத்து நவம்பர் 2020இல் ஆஸ்திரேலியா குறைந்தது 10 சிறப்புப் படை வீரர்களுக்கு பணிநீக்கம் தொடர்பான அறிவித்தலை அனுப்பியது. இதனை ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ABC) உறுதிப்படுத்தி அறிவித்தது.

இந்த விசாரணைகளின் போது ஒரு போர் வீரக் கலாச்சாரத்தின் வெட்கக்கேடான பதிவுகள் வெளியாகியுள்ளன என ஆஸ்திரேலிய பாதுகாப்பு படையின் (ADF) தலைவர் தெரிவித்தார்.இந்த கொலைகள் எவற்றையும் மோதலின் உச்சகட்டத்தின் போது நிகழ்ந்தவைகள் என்று தெரிவிக்க முடியாதவை என்றும் தெரிவித்தார்.

குற்றவாளியின் நோக்கம் தவறானதாகவோ தெளிவற்றதாகவோ அல்லது குழப்பமானதாகவோ இருந்த தருணத்தில் இந்த குற்றங்கள் நிகழவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். விசாரணைகளை மேற்கொண்ட ஒவ்வொருவரும் யுத்தச் சட்டங்கள்




எவ்வாறு போரிடவேண்டும் என்பதை நன்கு அறிந்தவர்கள் எனவும் தெரிவித்தார்.

சில விசேட படைப்பிரிவினர் சட்டத்தினை தங்கள் கைகளில் எடுத்தமையாலேயே இந்தக் குற்றங்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆயினும் உண்மையான போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல், உண்மைகளை வெளியிட்டு, அம்பலப்படுத்தியவருக்கு சிறைத் தண்டனை விதித்தன் மூலம் ஆஸ்திரேலிய ஜனநாயகத்தின் கரிநாள் என கருதப்படுகிறது.

# ‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவான புயல் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் வீசுகிறது

## உறுதியாகாகக் கூறுகின்றார் ராகுல்காந்தி

புதுடெல்லி,மே16

நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் ‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவாக புயல் வீசுவதாக ராகுல்காந்தி தனது வலைத் தளப் பதிவில் கூறியுள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி தனது ‘எக்ஸ்’ வலைத்தள பக்கத்தில் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். ராகுல்காந்தியின் பேச்சுகள் பா.ஜனதாவால் எப்படி திரித்துக்கூறப்பட்டன, உண்மை என்ன, பொய் என்ன என்பவை குறித்து காங்கிரஸ் கட்சி அந்த வீடியோவைத் தயாரித்துள்ளது.

அத்துடன், ஒரு பதிவையும் ராகுல் காந்தி வெளியிட்டுள்ளார். அதில், “தனது பொய் தொழிற்சாலை மூலம் பா.ஜனதா தனக்குத்தானே எவ்வளவு ஆறுதல் சொல்லிக்கொண்டாலும் எந்த மாற்றமும் ஏற்படாது. ஜூன் 4 ஆம் திகதிக்கு பிறகு, மோடி பிரதமராக இருக்க மாட்டார் என்று நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் ‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவாக புயல் வீசுகிறது” என்று அவர் கூறியுள்ளார்.



இதற்கிடையே, ஒடிசா மாநிலம் பொலாங்கிரில் நடந்த காங்கிரஸ் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் ராகுல்காந்தி கலந்து கொண்டார்.

கையில் அரசியல் சட்ட நகலை ஏந்தியபடி, கூட்டத்தில் பேசிய அவர், “தற்போதைய தேர்தலில் பா.ஜனதா வெற்றி பெற்றால், தலித், ஆதிவாசிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு ரத்து செய்யப்படும். பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படும். நாடு, 22 கோடீஸ்வரர்களால் நடத்தப்படும். அதனால்தான் மக்கள் அரசு அமைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறோம். அரசியல் சட்டத்தை கிழித்து வீசவும் பா.ஜனதா விரும்புகிறது. காங்கிரஸில் இருக்கும் நாங்களும், நாட்டு மக்களும் இதை அனுமதிக்க மாட்டோம்” என்று அவர் பேசினார்.

# 220க்கும் குறைவான ஆசனங்களே இம்முறை பா.ஜ.கவுக்குக் கிட்டும்!

## அடித்துக் கூறுகின்றார் கெஜ்ரிவால்

லக்னோ,மே16

பா.ஜ.க. 220க்கும் குறைவான தொகுதிகளிலேயே வெற்றிபெறும் என டெல்லி முதல்-மந்திரி கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள சமாஜ்வாதி கட்சியின் தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவும், டெல்லி முதல்-மந்திரியும், ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவாலும் இணைந்து செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது கெஜ்ரிவால் பேசியதாவது :-




நான் இந்தியா கூட்டணிக்கு வாக்கு கேட்டு உத்தரபிரதேசத்திற்கு வந்துள்ளேன். 4 முக்கிய விஷயங்களை பற்றி பேச விரும்புகிறேன். முதலாவது, இந்த தேர்தலில் பிரதமர் மோடி அமித்ஷாவை பிரதமராக்க வாக்கு கேட்கிறார். அடுத்தாண்டு செப்டம்பர் 17 ஆம் திகதியுடன் பிரதமர் மோடிக்கு 75 வயதாகிவிடும். அதன்பிறகு நாட்டின் பிரதமராக அமித்ஷாவுக்கு வழிவிட மோடி முடிவெடுத்துள்ளார். 75 வயதுடன் ஓய்வு பெற மாட்டேன் என்று பிரதமர் இதுவரை சொல்லவில்லை.

இரண்டாவது, இந்த தேர்தலில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் 3 மாதங்களில் உ.பி. முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

மூன்றாவது, அரசியல் அமைப்பை பா.ஜ.க. மாற்ற போகிறது, மேலும் எஸ்.சி, எஸ்.டி. இடஒதுக்கீட்டை ரத்து செய்ய முயற்சிக்கின்றனர்.

நான்காவது, ஜூன் 4ஆம் தேதி இந்தியா கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்.

தற்போதைய நிலைவரப்படி பா.ஜ.க. 220-க்கும் குறைவான இடங்களையே பெறும். அரியானா, டெல்லி, பஞ்சாப், கர்நாடகா, மராட்டியம், மேற்குவங்காளம், உ.பி., பீகார், ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் பா.ஜ.க.வின் வெற்றி வாய்ப்பு குறையும். பா.ஜ.க. மீண்டும் ஆட்சி அமைக்காது. இந்தியா கூட்டணி தான் ஆட்சி அமைக்கப் போகிறது.” இவ்வாறு அவர் பேசினார்.

இதனை தொடர்ந்து, அகிலேஷ் யாதவ் கூறுகையில், மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் பா.ஜ.க.விற்கு 143 தொகுதிகளுக்கு மேல் கிடைக்காது என்றார்.



# சுடப்பட்ட சுலோவேக்கியாப் பிரதமர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டினார்

பிரேக்,மே16

சுலோவேக்கியா பிரதமர் மர்ம நபரால் துப்பாக்கியால் சுடப்பட்டார். அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய ஐரோப்பிய நாடான சுலோவேக்கியாவின் பிரதமராக இருந்து வருபவர் ராபர்ட் பிகோ (வயது 59). ஏற்கனவே 2 முறை பிரதமர் பதவி வகித்துள்ள ராபர்ட் பிகோ கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் மீண்டும் பிரதமர் ஆனார்.

இதன் மூலம் அந்த நாட்டின் வரலாற்றில் நீண்ட காலம் பிரதமராக இருந்தவர் என்கிற பெருமையை அவர் பெற்றார். நாட்டு மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்ற பிரதமரான ராபர்ட் பிகோ, ரஷ்யா ஆதரவாளரும் ஆவார். அவர் நேற்று தலைநகர் பிராடிஸ்லாவாவில் இருந்து 150 கி.மீ. தொலைவில் உள்ள ஹண்ட்லோவா நகரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அங்கு திரண்டிருந்த அவரது ஆதரவாளர்களிடம் ராபர்ட் பிகோ உரையாடிக் கொண்டிருந்தார்.

அப்போது கூட்டத்தில் இருந்த மர்ம நபர் ஒருவர் பிரதமர் ராபர்ட் பிகோவை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டார். இதில் ராபர்ட் பிகோவின் வயிற்றில் 4 துப்பாக்கி குண்டுகள் துளைத்தன. இதில் பலத்த காயமடைந்த அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்தார். இதனால் அங்கு பெரும் பரபரப்பும், குழப்பமும் ஏற்பட்டது.

துப்பாக்கி சூட்டில் பலத்த காயமடைந்த ராபர்ட் பிகோவை அதிகாரிகள் மீட்டு ஹெலிக்கொப்டர் மூலம் சுமார் 29 கி.மீ. தொலைவில் உள்ள பன்ஸ்கா பிஸ்ட்ரிகா நகரில் உள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு டாக்டர் குழுவினர் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அடுத்த 4 மணி நேரம் மிகவும் சிக்கலானது என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் முதலில் தெரிவித்தன.

இதற்கிடையே பிரதமர் ராபர்ட் பிகோவை துப்பாக்கியால் சுட்ட மர்ம நபரை போலீசார் மடக்கிப்பிடித்து கைது செய்தனர். அவரிடம் துப்பாக்கி சூட்டுக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. பிரதமர் சுடப்பட்ட தகவலை அதிபர் ஜுவானா கேபுடோவா தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு அறிவித்தார். பதவியில் இருந்து வெளியேறும் அதிபரான ஜுவானா, இந்த தாக்குதலை ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் எனத் தெரிவித்தார்.

இதைப்போல புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பீட்டர் பெல்லரினியும் இந்த தாக்குதலை கண்டித்து இருக்கின்றமையுடன், இது சுலோவேக்கியா வரலாற்றில் இதுவரை இல்லாதது எனக் கண்டனம் தெரிவித்தார்.

இந்நிலையில் அரசாங்கக் கூட்டம் ஒன்றில் இருந்து வெளியேறிய துணைப் பிரதமர் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் டோமஸ் தாராபார் செய்தியாளர்களிடம் கூறுகையில், "நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். ஒரு புல்லட் பிகோவின் வயிற்றில் சென்றுள்ளது. இரண்டாவது ஒரு மூட்டில் தாக்கியுள்ளது. அதிர்ஷ்டவசமாக அறுவை சிகிச்சை சிறப்பான முறையில் நடந்தது. கண்டிப்பாக அவர் உயிர் பிழைத்து விடுவார் என்று நினைக்கிறேன். தற்போது அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இல்லை" என்று அவர் கூறினார்.

சுலோவேக்கியா பிரதமர் துப்பாக்கி சூட்டுக்கு ஆளாகியிருப்பது ஐரோப்பிய முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஐரோப்பிய நாடுகள் மட்டுமின்றி பல்வேறு நாடுகளின் தலைவர்களும் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்

# சிங்கப்பூரின் புதிய பிரதமராக லாரன்ஸ் வாங் பதவியேற்றார்

சிங்கப்பூர்,மே16

சிங்கப்பூரின் நான்காவது பிரதமராக பொருளாதார நிபுணர் லாரன்ஸ் வாங் நேற்றுப் பதவியேற்றார். சுமார் 20 ஆண்டுகள் பதவியில் இருந்த லீ சியென் தனது பதவியை துறந்த நிலையில், துணைப் பிரதமராக இருந்த லாரன்ஸ் வாங் நேற்று சிங்கப்பூர் பிரதமராக பதவியேற்றுள்ளார்.

51 வயதான லாரன்ஸ் வாங், சிங்கப்பூரின் பிரதமராகவும், நிதி மந்திரியாகவும் பதவி வகிக்க உள்ளார். அவருக்கு சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னம் நேற்று பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். சிங்கப்பூரில், திட்டமிடப்பட்ட அரசியல் தலைமை மாற்றத்தின் ஒரு பகுதியாக இந்தப் பதவிப் பிரமாணம் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



பக்கங்கள் - 5

# கனடா முரசு

வியாழக்கிழமை 16/05/2024

## இயற்கை அனர்த்தங்களால் கனடாவில் பேரிழப்புகளாம்

### 2023 இல் மட்டும் 3.1 பில்லியன் டொலர் நஷ்டம்

ஒன்ராரியோ, மே 16

கனடாவில் அதிகரிக்கும் இயற்கை அனர்த்தங்கள் பில்லியன் கணக்கில் டொலர்கள் செலவாகுவதற்கான காரணமாகின்றன C2 ▶





# 2016 இல் காட்டுத் தீயால் பேரழிவைச் சந்தித்த

# கனடிய நகரம் மீண்டும் அதே தீயின் ஆபத்தில்!

கடந்த 2016ல் காட்டுத் தீயால் பேரழிவை சந்தித்துள்ள ஆல்பர்ட்டா மாகாண நகரமொன்றை, தற்போதும் காட்டுத் தீ சூழ்ந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நகரத்தின் நான்கு புறநகர் பகுதி மக்களை தற்போது வெளியேறும்படி அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். Fort McMurray நகரின் சுற்றுவட்டாரப் பகுதிகளான Beacon Hill, Abasand. Prairie Creek மற்றும் Grayling Terrace ஆகிய பகுதிகளில் இருந்து மொத்தக் குடிமக்களும் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

தீயைக் கட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவியாக இருக்கும் என்றும், குடிமக்கள் அவர்களின் செல்லப்பிராணிகள், மருந்து, முக்கிய ஆவணங்கள் மற்றும் அவசரத் தேவைகளுக்கான பொருட்களுடன் வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். C2 ▶



# புதிய வகை கோவிட் உப திரிவே

# கனடாவில் பரவலாகப் பரவுகிறது

கனடாவில் புதிய வகை கோவிட் உப திரிவு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கோவிட் உப திரிவு கனடாவில் பரவலாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் தற்போதைய கோவிட் தொற்றாளர்களில் 30 வீதமானவர்கள் இந்த புதிய உப திரிவின் தாக்கத்திற்கு உள்ளானவர்கள் எனவும் C2 ▶



# கல்லறைகளைத் தேடும் முயற்சி குறித்து அதிருப்தி

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 16


பிரிட்டிஷ் கொலம்பியாவில் முன்னாள் வதிவிடப் பாடசாலை இருந்த இடத்தில் அடையாளம் காணப்படாத கல்லறைகள் உள்ள பகுதியில் முன்னெடுக்கப்படும் தேடுதல் நடவடிக்கை போதியதாக இல்லை என பூர்வீகக் குடிகள் பிரதானி ரொபர்ட் மிச்செல் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் பிரின்ஸ் ஜோர்ஜ் நகரத்திற்கு மேற்கே 160 கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள ஸ்டெல்லாடென் பூர்வீகக் குடிகள் தலைவராக மிச்செல் இருக்கின்றார்.

1976ஆம் ஆண்டு முதல் காணாமல் போன சிறுவர்கள் காணப்படுவதாக கூறப்படும் லெஜாக் இந்தியன் வதிவிட பாடசாலையில் தப்பியவராகவும் மிச்செல் இருக்கின்றார். அந்தச் சிறுவர்களின் தடயங்களைத் தேடும் பணி தொடர்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஏனைய பகுதிகளில் வதிவிட பாடசாலைகளில் அடையாளங் காணப்படாத கல்லறைகள் தொடர்பில் தேடுதல் முன்னெடுக்கப்பட்டும் வரும் நிலையில், லெஜாக் பாடசாலையிலும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என தாம் நம்புகிறார் என அவர் கூறியுள்ளார்.





# பிரதான கொலைச் சந்தேகநபர் காணொலி மூலம் மன்றின் முன்!

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 16

சீக்கிய செயற்பாட்டாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட நாலாவது சந்தேக நபர் நேற்று மே 15ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவர் பிரதான கொலைச் சந்தேகநபர் என பொலிஸார் தெரிவித்து வருகின்றனர்.

தமது முதலாவது நீதிமன்ற விசாரணையில் நான்காவது சந்தேகநபரான 22 வயதான அமன்தீப் சிங் காணொலி ஊடாக இணைந்து கொண்டுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் மாகாண நீதிமன்றத்தில் மே 21ஆம் திகதி மீண்டும் அவர் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இதன்போது, ஏனைய மூன்று சந்தேகநபர்களான கரன் பிரார், கமல்பிரித் சிங் மற்றும் கரன்பிரித் சிங் ஆகியோரும் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




**புதிய வகை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது.

ஃபீ.2 என்ற புதிய வகை உப திரிவே அண்மைக் காலமாக கனடாவில் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும், கோவிட் திரிவுகளினால் பாரதூரமான பாதிப்புக்கள் எதுவும் தற்போது பதிவாகவில்லை என மருத்துவத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களைப் போன்று இந்த புதிய வகை உப திரிவுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**இயற்கை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைய ஆய்வு ஒன்று கண்டறிந்துள்ளது.

1983ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காப்புறுதி நிறுவனங்கள் இயற்கை அனர்த்தங்களுக்காக வருடாந்தம் சராசரி 400 மில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அளவானது 2009ஆம் ஆண்டு முதல் சுமார் 2 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டில் 3.4 பில்லியன் டொலர்களும், 2023ஆம் ஆண்டில் 3.1 பில்லியன் டொலர்களும் செலவிடப்பட்டுள்ளன.

காட்டுத் தீ, கடும் குளிர், மற்றும் புயல் காற்று என்பன இந்த இயற்கை அனர்த்தங்களில் உள்ளடங்குகின்றது.

**2016இல்**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனிடையே, நகரின் தென்மேற்கில் 9,600 ஹெக்டேர் பரப்பளவில் பரவிய காட்டுத்தீயை அதிகாரிகள் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது. சமீபத்திய வெளியான தகவலின் அடிப்படையில் குழசவ ஆஉஆரசசயல நகரில் இருந்து 8 மைல்கள் தொலைவில் காட்டுத்தீ நெருங்கியுள்ளது.

மேலும் 8 ஆண்டுகளுக்கு முன்னர் காட்டுத்தீயால் மொத்தமாக பாதிக்கப்பட்ட நகரில் மீண்டும் காட்டுத்தீயை எதிர்கொள்வது என்பது மிக சிக்கலான விடயம் என அதிகாரிகள் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2016 இல் ஏற்பட்ட மிக மோசமான காட்டுத்தீயால் கிட்டத்தட்ட 90,000 மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். நகரம் முழுவதும் சாம்பலால் மூடியது. காட்டுத்தீயால் ஏற்பட்ட சேதம் மட்டும் 9 பில்லியன் கனேடிய டொலர்கள் என மதிப்பிடப்பட்டது.

தற்போது ஆல்பர்ட்டா மாகாணம் முழுவதும் 50 இடங்களில் காட்டுத்தீ அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதில் இரண்டு கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அதில் ஒன்று தற்போது Fort McMurray நகரை நெருங்கியுள்ளது என்றே அதிகாரிகள் தரப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது.



# 40 மில்லியன் டொலர்கள் மோசடி; கனடாவின் கிரிப்டோ கிங் கைது!

ஒன்ராரியோ, மே 16

கனடாவின் கிரிப்டோ கிங் என அறியப்படும் எய்டன் பிளெடஸ்கி ட்ரம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

40 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இணைய மோசடியில் ஈடுபட்டமைக்காகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண மோசடி தொடர்பில் பிளெடஸ்கியை கைது செய்வதற்கான அனுமதியை மே 2ஆம் திகதியன்றே ட்ரம் பொலிஸார் பெற்றிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

16 மாத விசாரணைகளின் பின்னரே பொலிஸார் நீதிமன்றத்திடம் பிளெடஸ்கியை கைது செய்வதற்கான பிடியாணையைப் பெற்றுள்ளனர்.

25 வயதான பிளெடஸ்கி நீதிமன்றத்தில் முன்னிலையாக்கப்பட்டதன் பின்னர் 100,000 டொலர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு, வீட்டில் இருந்து வெளியேறக்கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

# மொன்ரியல் சர்வதேச விமான நிலைய பெயர் உரிமை சர்ச்சை நீதிமன்றுக்கு!





கியூபெக், மே 16

மொன்ரியலின் புறநகர்ப் பகுதி விமானநிலையத்தை நகரத்தின் பெயருடன் இணைந்ததாக பெயர் மாற்றும் செய்வதனை எதிர்த்து மொன்ரியல் சர்வதேச விமான நிலையம் நீதிமன்றம் செல்லவுள்ளது.

எனினும், சர்வதேச விமான நிலையமானது தனியுரிமையைப் பேண முயற்சிப்பதாக புறநகர் விமான நிலையமும் நீதிமன்றத்தை நாடியுள்ளது.

மொன்ரியல் – ட்ரூடோ சர்வதேச விமானநிலையத்தை நிர்வகிக்கும் மொன்ரியல் எயார்போர்ட்டானது நியூ மொன்ரியல் மெட்ரோபொலிட்டன் விமானநிலையத்தின் பெயரை மாற்று மாறு கோரி கியூபெக் உயர் நீதிமன்றத்தினை நாடியுள்ளது.

செய்ன்ட் ஹியுபேர்ட் விமான நிலையம் என நீண்ட காலம் அறியப்பட்ட இந்த விமானநிலையமானது கடந்த பெப்ரவரியில் நியூ மொன்ரியல் மெட்ரோபொலிட்டன் விமான நிலையம் என பெயரை மாற்றிக் கொண்டது.




# தேவை உள்ள துறைகளத் தேடி பணி புரிய பயிற்சி பெறுங்கள்!

## சாகும் வரை உண்ணாவிரதமிருக்க முயல்வோருக்கு தொழிலாளர் துறை அமைச்சர் கூறும் ஆலோசனை

கனேடிய மாகாணமொன்று வெளிநாட்டவர்களுக்கெதிராக எடுக்க இருக்கும் முடிவொன்றை எதிர்த்து புலம்பெயர்ந்தோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வரும் நிலையில், தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர் என அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இந்நிலையில், அவர்களை சந்தித்த தொழிலாளர் துறை அமைச்சர், எந்தெந்த துறைகளில் வேலை உள்ளதோ, அந்த வேலைகளில் பயிற்சி பெறுமாறு அவர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

கனடாவின் Prince Edward Island மாகாணம், 2024, அதாவது, இந்த ஆண்டில், மாகாண பிரதிநிதித்துவ திட்டத்தின் கீழ் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் நிரந்தரக் குடியிருப்பு அனுமதிகளின் எண்ணிக்கையை 25 சதவிகிதம் குறைக்க இருப்பதாக அறிவித்துள்ளது. மருத்துவ அமைப்புக்கு ஏற்பட்டுள்ள அழுத்தம் மற்றும் வீடுகள் தட்டுப்பாடு காரணமாக இந்த முடிவை எடுக்க இருப்பதாக அம்மாகாணம் அறிவித்துள்ளது.

மருத்துவத் துறையில் பணியாற்றுவோர் மற்றும் கட்டுமானப் பணி செய்வோர் போன்ற சில துறையினருக்கு மட்டுமே நிரந்தரக் குடியிருப்பு அனுமதி வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்பட உள்ளதாக மாகாண அரசு அறிவித்துள்ளது. அதன் பொருள் என்னவென்றால், அடுத்த சில மாதங்களில், மற்ற துறைகளில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்தோரின் பணி அனுமதிகள் நீட்டிக்கப்படாமல் போக வாய்ப்புள்ளது என்பதுதான்.

ஆகவே, மாகாண அரசின் இந்த முடிவை எதிர்த்து தலைநகர் Charlottetownஇல் புலம்பெயர்ந்தோர் பலர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகிறார்கள்.

மாகாண அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் எங்களை ஏமாற்றிவிட்டது என்று கூறிய அவர்கள், மே மாதம் 16ஆம் திகதி – இன்று – தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் – ஒரு முடிவு எட்டப்படாவிட்டால் – சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத் தாங்கள் முடிவு செய்துள்ளனர் எனத் தெரிவித்திருந்தார்கள்.

இந்நிலையில், மாகாண தொழிலாளர் துறை அமைச்சரான Jenn Redmond, ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவரை நேற்று சந்தித்து அவரிடம் பிரச்சினைகளைக் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், 2025இல் பணி உரிமம் காலாவதியாகும் நிலையிலிருப்போர், பயிற்சித் திட்டம் ஒன்றில் இணையலாம் என அவர் ஆலோசனை கூறினார். அதாவது, எந்தெந்த துறைகளில் பணியாளர்களுக்கு அதிக தேவை உள்ளதோ, அந்த துறைகளில் பணி புரிவதற்கு, உரிய பயிற்சி பெறுமாறு அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

பிப்ரவரி 26ஆம் திகதி நிலைவரப்படி, கீழ்க்கண்ட துறைகளின் பணியாளர்களுக்கு தட்டுப்பாடு உள்ளதாக மாகாண இணையதளம் தெரிவிக்கிறது:–

- Nurse aides, orderlies and patient service associates;
- Transport truck drivers;
- Construction trades helpers and labourers;
- Light duty cleaners;
- Labourers in processing.manufacturing and utilities;
- Material handlers;
- Process control and machine operators food and beverage processing; and
- Industrial butchers and meat cutters, poultry preparers and related workers.

# சமூக ஊடக நிறுவனங்களுடன் ஒப்பந்தம் பிரிட்டிஷ் கொலம்பிய அரசு கைச்சாத்து



பிரிட்டிஷ் கொலம்பியா, மே 16

இணையத்தில் இளைஞர்களின் பாதுகாப்பிற்காக வரலாற்று முக்கியத்துவம் மிக்க உடன்படிக்கையில் பிரிட்டிஷ் கொலம்பிய அரசாங்கமும், சமூக ஊடக நிறுவனங்களும் கைச்சாத்திட்டுள்ளன.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் முதல்வர் டேவிட் எபி மற்றும் மெட்டா, கூகுள், டிக்டொக், எக்ஸ் மற்றும் ஸ்னெப் சாட் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இணைந்து வெளியிட்டுள்ள இணை அறிக்கையில் இந்த உடன்படிக்கை தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பங்கள், அரசாங்கம் மற்றும் நிறுவனனங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்றான இளைஞர்களின் பாதுகாப்பு தொடர்பில் இந்த உடன்படிக்கை கவனம் செலுத்துகின்றது.

பாதுகாப்பு உத்தரவு பெறப்படுவதற்கு முன்னர் இந்த சமூக தளங்களில் பகிரப்படும் நெருக்கமான காட்சி கொண்ட படங்களை உடனடியாக அகற்றுவதற்கு சமூக ஊடகத் தளங்கள் இந்த உடன்படிக்கையின் ஊடாக இணக்கம் கண்டுள்ளன.

# பலஸ்தீன ஆதரவுக் கூடாரங்களை அகற்றும்படி உத்தரவிடுவதற்கு கியூபெக் நீதிமன்றம் மறுப்பு!

## மெக்கில் பல்கலை நிர்வாகத்தின் மனு நிராகரிப்பு




கியூபெக், மே 16

மெக்கில் பல்கலைக்கழக வளாகத்தில் பலஸ்தீன ஆதரவு கூடாரங்களை அகற்றுமாறு கோரிய பல்கலைக்கழக நிர்வாகத்தின் மனுவை கியூபெக் உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்தக் கூடாரங்கள் பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை பல்கலைக்கழக நிர்வாகம் நிரூபிக்கவில்லை என நீதிபதி மார்க் சென்-பியர் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் வெளிப்பாட்டுச் சுதந்திரம் எதிர் மெக்கில்லின் சொத்து உரிமைகள் ஆகியவற்றுக்கு இடையிலான முரண்பாடான உரிமைகளை இந்த வழக்கு வெளிப்படுத்தியுள்ளதாக நீதிபதி தமது தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களாக பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்கள் சுகாதார வசதிகளற்றனவாக இருக்கின்றன எனவும், அவற்றை உடனடியாக அகற்ற உத்தரவிடுமாறும் கோரி பல்கலைக்கழக நிர்வாகம் இந்த வார ஆரம்பத்தில் மனு தாக்கல் செய்திருந்தது.

# கியூபெக் பாலம் இனிமேல் மத்திய அரசின் பராமரிப்பில்

## கனேடிய தேசிய ரயில்வே நிறுவனத்துடன் இணக்கம்



கியூபெக், மே 16

வரலாற்று சிறப்பு மிக்க கியூபெக் பாலத்தை கனேடிய தேசிய ரயில்வே நிறுவனத்திடம் இருந்து பெறுவதற்கான இறுதி உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நூறு வருடங்களுக்கு மேல் பழைமையான இந்த பாலம் தொடர்பில் பல தசாப்தங்கள் நீடித்த சர்ச்சை இதன் மூலம் முடிவுக்கு வந்துள்ளது.

அடுத்த 25 வருடங்களுக்கு மத்திய அரசாங்கமானது இந்த பாலத்திற்கான 1 பில்லியன் டொலர்கள் வரை நிதியினை பயன்படுத்தி பாலத்தை திருத்தி, மீள நிறப்பூச்சு அடித்து, பயன்பாட்டுக்கு கொண்டு வரும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

மே 15ஆம் திகதி கியூபெக் நகரில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே, ஜஸ்டின் ட்ரூடோ இதனைக் குறிப்பிட்டார்.